கண் வைத்திய நிபுணர்கள்
பரிசோதித்து எழுதிய
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை (20 - 02 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 85

# தஞ்சம் கோரும் இலங்கையர்களுக்கு தற்காலிக 'வீஸா' வழங்கப்பட வேண்டும்

## ஐ.நா. தூதரகம் கோரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 20

மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர்களுக்கு — இலங்கையில் இனச்சிக்கல் தீரும் காலப் பகுதிவரை — அவர்கள் அந்த நாடுகளில் தங்க தற்காலிக வீஸா வழங்கப்பட வேண்டும்.

— அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையரின் எண்ணிக்கை குறைந்த அளவாக இருப்பதால் அந்த நாட்டிலும் இலங்கையர்கள் தற்காலிக விஸா பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கப்படவேண்டும் என்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது.

சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு இலங்கை அரசுடன் அண்மையில் ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொண்டது.

அதன்படி 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதிக்கு பின்னர் தஞ்சம் கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்ப இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், பெப். 20

பலாலி இராணுவமுகாமில் இருந்து தெல்லிப்பளைப் பகுதிகளை நோக்கி நேற்று நண்பகல் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை மாவிட்டபுரத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதியை நோக்கி தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (இ-15)

## ரஞ்சன் விஜேரத்தினாவின் மகன் ஐ.தே. கட்சியில்

கொழும்பு, பெப். 20

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜேரத்தினாவின் மகனான ரொஹான் விஜேரத்தினா ஐ.தே. கவில் சேர்ந்து தீவிரமாக அரசியலில் ஈடுபடப் போகிறார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனது தந்தையான ரஞ்சன் விஜேரத்தினாவின் கொலையை அடுத்து ஐ.தே.க. அரசின் மீது வெறுப்படைந்த ரொஹான் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார்.

பிரேமதாஸவின் கொலையின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை அடுத்தே அவர் தற்போது நாடு திரும்பி அரசியலில் ஈடுபட உள்ளதாகவும் அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

## வலைப்பாட்டுக் கடலில் யாழ். மீனவர் மீது தாக்கு

மன்னார் மாவட்டம் முழங்காவில் பகுதியில் உள்ள வலைப்பாட்டு கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதனன்று காலை இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது தாக்கப்பட்ட மீனவரின் படகும் கடற்படையினரால் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரவேலு ஜெயபாலன் (வயது 20) என்ற மீனவரே கடற்படையினரால் தாக்கப்பட்டவராவார். (இ-5)

# ஸ்ரீலங்கா கடற்படையினர் சூட்டுக்கு இரு இந்திய மீனவர்கள் பலியாகினர்

## ஒரு வார காலத்தில் இரண்டாவது சம்பவம்

சென்னை, பெப். 20

இந்திய மீனவர் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். கச்சதீவுக்கு சமீபமாக நேற்று அதிகாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த மீனவர் இராமேஸ்வரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

இந்த மீனவர்கள் இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பாம்பன் பகுதியை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் ஒரு வார காலத்தில் நடத்திய இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலின் போது நான்கு இந்திய மீனவர்கள் காயம் அடைந்தது தெரிந்ததே.

ஸ்ரீலங்கா கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று கடந்த வெள்ளிக்கிழமை இராமநாதபுரம் பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்து 24 மணி நேரத்துக்குள் மீண்டும் இந்திய மீனவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (இ 9)

## இராமநாதபுரம், பாம்பன் பகுதிகளில் பதற்ற நிலை!

சென்னை, பெப். 20

இந்திய மீனவர்கள் இருவர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து தமிழ் நாட்டின் சில பகுதிகளில் பதற்றம் நிலவுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

சில இடங்களில் வீதி மறிப்பு போராட்டங்கள் இடம் பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராமநாதபுரம், பாம்பன் ஆகிய பகுதிகளிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் அதிகரித்துள்ளதை அடுத்து ஜெயலலிதா அரசுக்கு புதிய நெருக்கடிகள் உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## மே மாதத்துக்கு முன்னர் அரசமைப்பில் மாற்றம்?

கொழும்பு, பெப். 20

எதிர் வரும் மே மாதத்துக்கு முன்னர் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படும். இது சம்பந்தமான 3 திட்டங்கள் குறித்து ஐ. தே. க. எம். பிகளிடம் ஆலோசனை பெறப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

★ நாடாளுமன்ற மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்தல்.

★ ஜனாதிபதி தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துதல்.

★ தற்போதைய அரசை 6 வருடங்களுக்கு நீடிக்க அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துதல்.

இவை தொடர்பாக ஐ. தே. க. எம். பிகளின் அபிப்பிராயத்தைப் பெற்று அரசமைப்பை மாற்ற திட்டமிடப்பட்டு வருகிறது என்றும் —

அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை சுதந்திரக் கட்சியில் உள்ள அநுரா ஆதரவாளர்கள் 27 பேரிடமிருந்து பெற்றுக் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-9)

### முச்சந்தி முரளி



ஆட்களை முடிச்சாச்சு இனி மரங்களை முறிக்கினம் போல ....!

# மட்டக்களப்பில் மீண்டும் ஆட்கடத்தல் சம்பவங்கள்

கொழும்பு, பெப் 20

மட்டக்களப்பு மாவட்டம் மன்னம்பிட்டி, சொருவில் மற்றும் கல்லடி பகுதிகளில் ஆட்கடத்தல் சம்பவங்கள் புதிதாக ஆரம்பித்துள்ளன என்றும் —

இராணுவம், விசேட அதிரடிப்படை ஆகியவற்றுடன் தேச விரோதக் குழுக்களும் இக் கடத்தல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் இவர்கள் வீடுகளினுள் நுழைந்து ஆண், பெண் என்ற பேதமின்றி தமிழ் மக்களைக் கடத்திச் செல்வதாகவும் —

இதன் காரணமாக மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடத்தப்படுபவர்களில் பெரும்பாலோர் வயோதிபர்கள் என்றும் சொல்லப்படுகிறது.

கடந்த பத்தாம் திகதி மன்னம்பிட்டிப் பகுதியில் 24 ஆண்களும் 7 பெண்களும் இராணுவத்தினராலும் விசேட அதிரடிப்படையினராலும் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும் —

அவர்கள் பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை என்றும் செய்திகள் தெரிவித்தன.

மூன்று வாரங்களுக்கு முன்பு 4 தமிழர்களை படையினர் வெட்டிக் காயப்படுத்தி விட்டு பிடித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சொருவிலில் 7 தமிழர்கள் படையினரால் பிடித்துச் செல்லப் பட்டனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-க)

# அளவெட்டி பகுதியில் நேற்று விமானங்கள் குண்டு வீச்சு!

## தோட்டங்கள், வீடுகள் சேதம், மாடுகள் பலி

அளவெட்டி, பெப். 20

அளவெட்டி வடக்கில் நேற்று இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சின்போது இரண்டு மாடுகள் உடல் சிதறிப் பலியாகின. 20க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் முறிந்தன மூன்று வீடுகள் சேதம் அடைந்தன.

நேற்றுக் காலை 8.30 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

முதலில் ஹெலி ஒன்று அப்பகுதியை வட்டமிட்டுச் சென்றது. அதனைத் தொடர்ந்து இரு சியாமா செட்டி குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதிக்கு வந்து முள்ளானை, தெரிட்டி, நாக்மடம் ஆகிய பகுதிகளை வட்டமிட்டு 5 குண்டுகளை வீசின.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதியில் இருந்து ஏற்கனவே குடிமக்கள் வெளியேறி இருந்ததால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. அநேகமான குண்டுகள் தோட்டப் பகுதிகளிலேயே விழுந்து வெடித்தன.

இச்சம்பவத்தின்போது மலைவேம்படிச் சந்தையில் கூடிநின்ற மக்களும், வியாபாரிகளும் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சிதறி ஓடினர்.

நேற்று முன்தினம் காலை ஹெலிக்கொப்டர் ஒன்றும் குண்டு வீச்சு விமானம் ஒன்றும் இப்பகுதியில் வட்டமிட்டுச் சென்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-15-18)

## பயிலுநர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

### பரீட்சையின்றி வழங்கப்படும்

கொழும்பு, பெப். 20

நான்காண்டுச் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பயிலுநர் ஆசிரியர்களை பரீட்சையின்றி பதவியில் நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிலுநர் ஆசிரியர்களை பரீட்சையின்றி நிரந்தரமாக்குமாறு தேசியக் கல்விச் சேவையாளர் சங்கம் உட்பட பல ஆசிரிய சங்கங்கள் நீண்டகாலமாகக் கோரிவந்தன.

# யாழ். தபால் சேவை சீர்குலைப்பு தமிழர்கள் மீதான சித்திரவதை

## நற்சமூக நடுநிலையம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், பெப். 20

'தபால் சேவை ஒரு அடிப்படை மனித தேவையாகும். வடக்கில் வாழும் மக்களுக்கு இந்தத் தேவை மறுக்கப்பட்டுள்ளது. வடக்கிற்கு வெளியேயும் வெளி நாடுகளிலும் உற்றார், உறவினர் உள்ள எம் மக்களைப் பொறுத்தவரையில் இது உண்மையில் ஒரு சித்திரவதைச் செயலாகும்.'

நற்சமூக நடுநிலையம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

★ சஞ்சிகைகள், விளம்பரங்கள், அரசாங்க சுற்றிதமாலிகள் ஆகியன ஒழுங்காக வராமல் இருப்பதால் எமது மக்கள் கல்வி ரீதியிலும் வேலை வாய்ப்பு ரீதியிலும் பாதிக்கப்படுகிறார்கள்; அத்துடன் வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தை நம்பி வாழும் மக்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

★ போரில் சில வேளைகளில் சேவை குழம்புவதுண்டு. ஆனால் இப்பொழுது நடைபெறுவது போன்ற தொடர்ச்சியான [illegible] பண்ட மனித உரிமைகளைக் கோரும் மக்கள் மீதான பழி வாங்கும் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

★ இத்தகைய நடத்தையைக் கண்டு இங்குள்ள மக்கள் நீங்கள் எங்களை அந்நியராகவே நடத்துகிறீர்கள் என்று கருதுகிறார்கள்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி முதல் இவ்வாண்டு ஜனவரி 28 ஆம் திகதி வரை எந்தக் கடிதமும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவில்லை அதன் பின்னர் கொழும்பில் இருந்த கடிதங்களில் சிறிய பகுதி மட்டும் தான் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது.

கடிதங்கள் அனைத்தும் இழிக்கப்பட்டு சிதைக்கப்பட்டிருந்தன. கடந்த மூன்றரை ஆண்டுகளாக எமது கடிதங்கள் இவ்வாறு தான் கையாளப்படுகின்றன.

"முன்னதாக கடிதங்களைச் சேர்த்து, முன்னதாக வழங்குதல்" — இது தான் தபால் சேவையின் குறிக்கோளாகும்.

சர்வதேச தபால் சங்கத்துடன் ஸ்ரீலங்கா செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி அதன் அங்கத்துவ நாடுகளில் போடப்படும் தபால்கள் அனைத்தும், கட்டணம் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட்டது என்ற முறையில் கருதப்பட்டு கையாளப்பட வேண்டும்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கான கடிதங்களைப் பொறுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தென்மாகாணசபை தேர்தலில் ஐ.தே.க. படுதோல்வி அடையும்

## ஆய்வு நடத்திய குழு அறிக்கை

நடைபெறவுள்ள தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி அடையும்.

தேர்தல் தொடர்பாக அபிப்பிராய ஆய்வு ஒன்றை நடத்திய குழு ஒன்று தனது அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

அரச விவசாய துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள் கொண்ட அந்தக் குழு காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் ஒரு வார காலம் இந்த ஆய்வினை நடத்தியது.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைச் சந்திக்க நேர்ந்தாலும் வெற்றி பெறுவதற்காக முயற்சி செய்வதால் பயன் உண்டு என்றும் —

தேர்தல் தொடர்பாக ஜனாதிபதிக்கு கொடுக்கப்படும் தவறான தகவல்களை கருத்தில் கொண்டு தேர்தலை அவர் நடத்தாவிடின் 1988 ஆம் 89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்டது போன்ற கிளர்ச்சிகள் தென் பகுதியில் தோன்றக் கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் அந்த ஆய்வுக் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-65)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக
சமூக விஞ்ஞான மன்றத்தால்
நடத்தப்பட்ட

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

பரிசிற்குரிய இலக்கங்கள்:

முதலாம் பரிசு 1368
இரண்டாம் பரிசு 1604
மூன்றாம் பரிசு 7226

ஆறுதல் பரிசு பத்திற்குரிய இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 0810 | 4022 | 2907 | 2902 |
| 5265 | 3417 | 6030 | |
| 6702 | 4653 | 4797 | |

நன்றி:
(29511) — சமூக விஞ்ஞான மன்றம்.



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் கிளையின் அனுசரணையுடன்
வலிகாமம் வடக்குப் பிரிவு நடத்தும்
செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர்

## ஹென்றி டுனாண்ட்
## ஞாபகார்த்த விழா

காலம்:- 20-02-1994 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
இடம்:- யா/ இராமநாதன் கல்லூரி
மருதனார்மடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. அருந்தவராசா — தலைவர்.
சோ. செல்வரத்தினம் — கௌரவ செயலாளர்.
(7007)



LUXINTENEBRIS

ENGLISH TEACHERS' EXAMINATION - 1994

WEEK-END Classes for the above Examination will Commence on Sunday, the 20th
Time: 10 to 11-30 a.m.
Lectures: KANDIAH NAVARENDRAN

JAFFNA ENGLISH ACADEMY
27, Rakka Lane, Chundikuli, Jaffna
[C-7253]



## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி விநாயகமூர்த்தி
அவர்கள்

அன்னாரின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடபிராந்திய
யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
(இ-7404)



## 19ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



விஸ்வப் பிரம்ம குல
அமரர் இராசா கனகசபாபதி
(கனகரெத்தினம்)

மலர்வு: 26 – 01 – 1925
உதிர்வு: 02 – 02 – 1994

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்த எம் ஒளிவிளக்கே!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நிகழும் ஸ்ரீமுக வருஷம் மாசி மாதம் 8ஆம் நாள் (20-02-94) இன்று ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி வைபவத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி,
மக்கள்.

பூனாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
[29540]


# கனரக வாகனங்களுடன் சேர்பிய படைகள் பின்வாங்கி செல்கின்றன

## நேட்டோவின் காலக்கெடு இன்றுடன் முடிவு

லண்டன், பெப் 20

பொஸ்னிய தலைநகர் சரஜேவோவில் இருந்து சேர்பிய மற்றும் பொஸ்னிய படைகள் வெளியேற நேட்டோ இராணுவ அணி விதித்துள்ள காலக்கெடு இன்றுடன் முடிவடையவிருக்கும் வேளையில்-

சரயேவோவை முற்றுகையிட்டுள்ள சேர்பியப் படையினர் தமது கனரக வாகனங்களுடன் அங்கிருந்து பின்வாங்கி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஏற்கனவே விதிக்கப்பட்ட காலக்கெடுவின்படி சேர்பிய படைகள் தமது முற்றுகையைக் கைவிட்டு விலகாவிடில் சேர்பிய படையினரின் நிலைகள் மீது வான்வழித்தாக்குதல் நடத்துவது என்ற முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு வோரன் கிறிஸ்தோபர் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை ஆத்திப்புலம் அருள் மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோயிலின் மஞ்சத் திருவிழா இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும்.

மாலை 6-30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் ஞானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் இசைச் சொற்பொழிவு இடம்பெறும். (த-80)

## இன்று

யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் பிரதேசக் கருத்தரங்குகள் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியிலும் —

பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திலும் நடைபெறும். (த-89)

★ ★ ★

கடந்தமாதம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட கண் பரிசோதனையின் போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் இன்று ஞாயிறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (த-117)

## பனையில் பங்கீட்டு அட்டைக்கு சீனி

தென்மராட்சி, பெப். 20

பளை ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு முக்கால் கிலோ வீதம் கட்டுப்பாட்டு விலையில் சீனி வழங்கப்படுகிறது.

இச் சங்கத்தினால் கடந்த வாரமும் பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ சீனி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## இந்திய கிரிக்கெட் கப்டனாக அஸாருதீன்

சென்னை, பெப். 20

அடுத்த மாதம் இந்தியாவுக்கும், நியூஸிலாந்துக்கும் இடையில் நியூஸிலாந்தில் நடைபெற உள்ள கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு அஸாருதீன் கப்டனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ-9)

## நாளை

கைதடி, நுணாவில் பகுதியில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் வைத்திய பரிசோதனைகளும் தொழுநோய் ஆய்வும் சாவகச்சேரி சுகாதர வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறும். (க-162)

★ ★ ★

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நாளை திங்கள் காலை 9-35 மணிக்கு புதிய பாலர் பாடசாலை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். (த-154)

★ ★ ★

சண்டிலிப்பாய், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆண்டு 9 வகுப்புகளுடைய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க)


வீதியோரம் மரம் நடுவோம்
விழி [illegible]


# சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாணம் பெப் 20

யாழ். மாநகர சபை சர்வதேச மகளிர் தினத்தை மார்ச் 8 ஆம் திகதி அனுசரிக்க உள்ளது.

இது தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளர் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எமது பகுதி வாழ் தாய்க்குலத்தினதும், பிள்ளைகளினதும் நன்மை கருதி ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் ஆதரவுடன் கடந்த பத்து வருடங்களாக நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் எமது தாய்/சேய் நல சேவைகளை முன்னெடுக்க பல தரப்பட்ட நடவடிக்கைகளை மாநகர சபை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஓர் அம்சமாக எமது சேவைகளில் சமூக ஈடுபாட்டை காட்டும் முகமாக வட்டார மகளிர் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன் அங்குரார்ப்பண வைபவமும், சர்வதேச மகளிர் தினமும் எதிர்வரும் மார்ச் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலைநிகழ்ச்சிகளாக தாய்க்குலத்தின் தற்போதைய நிலைபற்றியும், எதிர்கால முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது மாலை மகளிர் தின கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

எமது மேற்படி பணிகளைச் சிறப்புறச் செய்து முடிக்க உதவ விரும்புவோர் மாநகர சபை பொதுசனத் தொடர்பு அதிகாரியுடனோ, சுகாதார அலுவலகத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் திட்டமிடல் உத்தியோகத்தருடனோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அன்னை பூபதிதினம்விரிவாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு

உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகி அன்னை பூபதியின் நினைவு தினம் அடுத்த மாதம் 19 ஆம் திகதி முதல் ஏப்ரல் 19 ஆம் திகதி வரை தமிழீழப் பகுதி எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஆடம்பரமற்ற முறையில் நினைவு நாள் நிகழ்ச்சிகளை கோட்ட, வட்ட, மாவட்ட மட்டங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அன்னை பூபதி வரலாற்றுடன் இணைந்த போராட்ட காலத்தை உள்ளடக்கிய போட்டிப் பரீட்சை இம்முறையும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் நடத்தப்படவுள்ளது.

பொது நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள் மற்றும் அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடைசி இரு நாட்களும் அடையாள உண்ணாவிரதம், பொதுக் கூட்டம் என்பன இடம்பெறும்.

அக்காலப் பகுதியில் நிதர்சனம் நிறுவனமும், கலை பண்பாட்டுக் கழகமும் இணைந்து 'பூபதி அம்மா' வரலாற்றை உள்ளடக்கிய 30 நிமிடத்துக்கு உட்பட்ட வீடியோ படம் ஒன்றும் தயாரிக்கப்படவுள்ளது. (இ-5)

# அமெரிக்காவுடன் வர்த்தகப்போர் நடத்தி வரும் ஜப்பான்

வர்த்தகப் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா-ஜப்பான் உறவு நிலை பற்றி வெரித்தாஸ் வானொலியில் இடம்பெற்ற விமர்சனம் இங்கு தரப்படுகின்றது. ''உண்மையின் எண்ணங்கள்'' என்ற தலைப்பில் இது ஒலிபரப்பானது.

உலகம் பல போர்களைச் சந்தித்துள்ளது. அது உலகப் போர் தொடங்கி ரஷ்ய — அமெரிக்கப் பனிப்போர்வரை எல்லாம் முடிந்து போய்விட்டது.

இப்போது வர்த்தகப்போர் ஆரம்பமாகியுள்ளது.

ஜப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே தொடங்கியுள்ள வர்த்தகப் போர் ஒரு தொடக்கம் தானே தவிர இறுதியானதல்ல.

'கைக்குருவியைக் கொண்டு காட்டுக் குருவியைப் பிடிக்கும்' முயற்சியில் அமெரிக்கா ஈடுபட—

'கையிலே காசில்லை, முகத்திலே களையும் இல்லை' என்ற ரீதியில் அமர்ந்திருக்கிறது ஜப்பான்.

ஆசியப் பிராந்தியத்தில் வர்த்தக ரீதியாக ஆழமாகக் கால்பதித்துள்ள அமெரிக்காவை மிஞ்சி தனது வர்த்தக ஏகாதிபத்தியத்தை ஆசியாவில் விஸ்தரிக்கும் தீவிர முயற்சியில் இறங்கியவாறே தனது பொருளாதார நிலை சரியில்லை என்கிறது ஜப்பான்.

ஜப்பான் தற்போது பொருளாதார இறக்கத்தைச் சந்தித்து வந்தாலும் வருங்கால கட்டத்தில், வரும் நாட்களில் அமெரிக்காவுக்கு வர்த்தக ரீதியில் சவால் விடுக்கும் நடவடிக்கையாக தற்போதைய ஜப்பான்—அமெரிக்கா வர்த்தகப்போரை நாம் அணுக வேண்டும்.

ஜப்பான் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் தோல்வி கண்ட பின்னர் அது பொருளாதாரரீதியில் மேம்பாடடைய அமெரிக்கா பல உதவிகளைச் செய்தது.

அவைகளில் ஒன்று தான் ஜப்பானில் இருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் அமெரிக்காவில் விற்பனை செய்யப்பட வழங்கப்பட்டுள்ள தாராள அனுமதியாகும்.

அமெரிக்கா வழங்கிய இந்த சந்தர்ப்பத்தை மிகச் சாதுரியமாகப் பயன்படுத்திய ஜப்பான், அமெரிக்காவை தனது நல்லதொரு விற்பனைச் சந்தையாக பயன்படுத்திக் கொண்டது பயன்படுத்தியும் வருகிறது.

இதனால் அமெரிக்கா ஜப்பானில் இறக்குமதி செய்யும் பொருள்களை விட ஜப்பான் சுமார் 18 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான அதிகமான பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து தனது விற்பனையை நடத்துகிறது.

வன்றக் கொடுத்த தடி[illegible] பண்டையைப் பிளப்பதா' என்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் நிலைப்பாடு என்னவென்றால், ஜப்பான் எவ்வளவு அமெரிக்காவில் இறக்குமதி செய்கிறதோ, அந்தளவுக்கு அமெரிக்காவும் ஜப்பானில் இறக்குமதி செய்ய ஜப்பான் அனுமதிக்க வேண்டும் என்பதே இதற்கு உடன்பட ஜப்பான் மறுக்கிறது.

குறிப்பாக அரிசியை ஜப்பானில் இறக்குமதி செய்வது உட்பட கார் உதிரிப்பாகங்கள் ஜப்பானிய நிறுவனங்களின் நம்பிக்கை.

இதன் மூலம் சீனா, மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தனது வர்த்தகத்தை பெரிதும் விஸ்தரித்துள்ள ஜப்பானிய நிறுவனங்கள் இந்நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து தங்களின் ஏற்றுமதி அளவை உயர்த்தும் என்பதும் அமெரிக்காவைச் சிந்திக்க வைத்துள்ளது.

எனவே ஜப்பானைப் பணிமாகக் காய்களை நகர்த்தினால் தனக்கு என ஒரு தனித்துவத்தை ஆசியாவில் ஜப்பானால் உருவாக்க முடியும்.

மேலும் தற்போது அமெரிக்கா ஜப்பானுக்கு எதிராக விதிக்கப்படவுள்ள வர்த்தகத் தடைகளை கைவிடும்படி ஐரோப்பிய நாடுகள் சிலவும் ஆசிய நாடுகளும் கேட்டு இருப்பது ஜப்பான் இந்த நாடுகளின் திசைக்கு தனது பார்வையைத் திருப்ப வழிவகுக்கக் கூடும்.

## சீனாவுடன் இணைந்து ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த முயற்சி

கார்கள், மருந்துப் பொருள்கள் தொலைபேசி வியாபாரம் உட்பட ஐந்து துறைகளில் தாம் அதிகமாக விற்பனை செய்ய ஜப்பான் தமது சட்டத்தைத் தளர்த்த வேண்டும்; இல்லையேல் ஜப்பான் தனது நாட்டில் செய்யும் வர்த்தகத்துக்கு தடை விதிப்போம் என மிரட்ட ஆரம்பித்துள்ளது அமெரிக்கா.

'சேலை இல்லை என்று சின்னாயி வீட்டுக்குப் போனாளாம்; அவள் ஈச்சம்பாயைக் கட்டிக் கொண்டு எதிரே வந்தாளாம்' என்ற கதையாக, தனது பிரச்சினைகளை ஒரேயடியாக அடுக்கியிருக்கிறது ஜப்பான்.

அது மட்டுமல்ல — கடந்த வாரம் அமெரிக்கா சென்ற ஜப்பான் பிரதமர் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணிய மறுத்து விட்டார்.

எனவே எதிர்வரும் நாட்களில் அமெரிக்க - ஜப்பான் உறவில் பெரும் விரிசல் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

### முதல்கட்டம்

இதன் முதற்கட்டமாக பொருளாதார இறக்கத்தைச் சந்தித்து வரும் ஜப்பானின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஜப்பானின் நாணயம் 'யென்'னின் மதிப்பை உயர்த்தும் வழிமுறைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

ஜப்பானின் 'யென்'னின் மதிப்பை உயர்த்துவதன் மூலம் ஜப்பானின் ஏற்றுமதி வியாபாரம் பாதிக்கப்படும்; ஜப்பானில் இறக்குமதி செய்வது லாபத்தைக் கொண்டு வரும் என்பது அமெரிக்காவின் திட்டம்.

ஆனால் ஜப்பானின் பொருளாதார இறக்கம் ஜப்பான் முதன் முதலாக எதிர்கொள்ளும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை, பிறப்பு விகித எண்ணிக்கை குறைந்திருப்பது கூலி உயர்வு-போன்றவற்றினால் ஜப்பானின் பல பெரிய நிறுவனங்கள் ஆசியாவின் பல நாடுகளில் புதிதாக தொழிற்சாலைகளை அவங்கியுள்ளன.

இதன் மூலம் குறைந்த கூலி தொழிலாளர்களைப் பெற்று உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பது ஜப்பானைவைக்கும் முயற்சியில் அமெரிக்கா 'சுப்பர் 301' என்ற தடைச்சட்டத்தை ஜப்பானுக்கு எதிராகப் பிரயோகிக்க முடிவு செய்யக்கூடும்.

இவ்வாறு ஜப்பான் அமெரிக்க உறவு சீர் குலைந்தால் அது ஜப்பான்— அமெரிக்க அரசியல் உறவைப்பாதிக்காது என்று இரு நாடுகளும் கூறிக்கொண்டாலும், அது நம்பும்படியானதொன்றல்ல.

அமெரிக்கா தனது அரசியல் நோக்கத்தை எப்படி தனது வர்த்தக உறவில் காட்டுகிறதோ அதுபோலவே வர்த்தக விரிசல் அரசியல் உறவிலும் வெளிப்படும் எனலாம்.

இதுவரை அமெரிக்காவின் 'ஜால்ரா' வாக இருந்துவந்த ஜப்பான் மெல்ல மெல்ல ஐரோப்பாவுடன் தனது நெருக்கத்தை அதிகரிப்பதிலும் ஆசியாவில் ஒரு புதிய கூட்டமைப்பை உருவாக்கியோ அல்லது தனது தனிப்பட்ட செல்வாக்கை ஏற்படுத்துவதிலோ ஜப்பான் இறங்கக்கூடும்.

### ஆசிய நாடுகளில் காலூன்ற முயற்சி

ஜப்பான் மூன்றாம் உலக நாடுகளுக்கு வாரி வழங்கும் 33 ஆயிரம் கோடி ரூபாவில் 60 சதவீதமான உதவி சீனா உட்பட ஆசிய நாடுகளுக்குக் கிடைக்கிறது.

இதனால் ஆசிய நாடுகளில் புதிதாகக் காலூன்றும் முயற்சியில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது. ஆசிய நாடுகளில் ஜப்பான் தனது செல்வாக்கை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயல்படுகின்றது.

எனவே ஜப்பான் அமெரிக்காவின் பிடியில் இருந்து விலக ஆரம்பித்துள்ளது.

சீன அமெரிக்க உறவு எப்போதுமே 'ஆடு — புலி ஆட்டம்' போன்ற நிலையில் இருக்கும் போது —

ஜப்பானும் சீனாவும் அரசியல் ரீதியாக உறவை நெருக்கமாக்கினால் ஆசியாவில் அமெரிக்காவின் தாக்கத்தை இந்த நாடுகளால் வெகுவாகக் குறைக்க முடியும்.

ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் நட்பு நாடுகள் பல உள்ளன என்று கூறுவதைவிட — அமெரிக்காவுக்கு பயந்து கீழ்ப் படியும் ஆசிய நாடுகளே அதிகம்.

எனவே ஜப்பான் விவேக[illegible]

மொத்தத்தில்—அமெரிக்க—ஜப்பான் உறவில் ஏற்படும் விரிசலின் ஆரம்பம் இது. இதுவே தொடர்கதையானால் ஜப்பான் அரசியல் ரீதியாகவும் ஆசியாவில் தன்னை ஒரு வல்லரசாக்கும் முயற்சியில் இறங்கக்கூடும். அது ஜப்பானுக்கு சாத்தியமானது ஒன்று.

''எட்டினால் குடுமியைப் பிடி: எட்டாவிட்டால் காலைப் பிடி'' என்ற தந்திரத்தை ஜப்பான் இம்முறை கையாளாது என்றே நம்பலாம். (இ-எ)

## யாழ். ஆஸ்பத்திரி புதிதாக 30 சிற்றூழியர்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ் போதனா வைத்திய சாலையில் கடந்த 16ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெற்ற சிற்றூழியர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சையில் தேறியவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய 135 பேரில் 30 பேரே தெரிவுசெய்யப்பட்டனர்.

தெரிவானசிற்றூழியர் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். (இ-15)

## புலிகளிடமுள்ள கைதிகள் குறித்து சு. கட்சி எம். பி.

கொழும்பு, பெப். 20

பூநகரி மோதலின் கைதானவர்களில் இராணுவத்தினர் 29 பேரும் படையினரின் சிவில் ஊழியர்கள் 50 பேரும் ஜனகபுர முகாம் (மண்கிண்டிமலை) தாக்கி அழிக்கப்பட்டபோது கைதான 4 இராணுவ வீரர்களும் இப்போது புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா நாடாளுமன்ற எம். பியான ஜி. வீ. குணரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புக் காய்ச்சல் நோயை தடுப்பதற்கு சில ஆலோசனைகள்

எமது பகுதிகளில் நிலவுகின்ற இன்னுமொரு முக்கியமான நோய்ப்பிரச்சினைகளில் ஒன்று நெருப்புக் காய்ச்சலாகும். இதனை ''டைபோயிற்'' காய்ச்சல் (Typhoidfever) என்றும் அழைப்பார்.

தனிமனித சுகாதாரத்தை (Personal Hygine) பேணாதவர்களுக்கும் கண்ட கண்ட இடங்களில் அழுக்கான உணவுகளையும் நீராகாரங்களையும் உண்ணுபவர்களுக்கும் இந்த நோய் ஏற்படும். மலசலம் கழிக்கும் மலசலகூடங்களை பயன்படுத்தாமல் வெளியான இடங்களில் மலம் கழிப்பதனாலும் இந்த நோய் பரவுகிறது. கடைகளிலும், உணவகங்களிலும் ஈக்கள் — இலையான்கள் அழைகின்றன. அழுக்கான உணவுகளை உண்பவர்களுக்கும் நெருப்புக்காய்ச்சல் ஏற்படும். உணவு தயாரிப்புகளில் ஈடுபடுபவர்கள்— அது வீட்டிலுள்ள தாயாக இருந்தாலும் சரி— பலர் உண்ணுகின்ற, உணவகங்கள், தேநீர்கடைகள் பொதுவைபவங்கள், பேக்கறிகள் என்பவற்றில் பெருமளவில் உணவு தயாரிப்பில் ஈடுபடுவர்களானாலும் சரி— கைகளில் உள்ள நகங்களை வெட்டி சுத்தமாக இருக்கவேண்டும். உணவு தயாரிப்பில் ஈடுபட முன்னரும், சமைத்த உணவுகளை பரிமாற முன்னரும் சவர்க்காரம் இட்டு கைகழுவி சுத்தமாக இருக்கா விட்டால் இந்தநோய் பரவும் ஆபத்து இருக்கிறது. ஏற்கனவே நெருப்புக்காய்ச்சல் உள்ள ஒருவருடைய எஞ்சிய உணவுகளை— பாவித்த உணவுப் பாத்திரங்களை— ஏனையோர் பாவிக்கும்போது அவர்களுக்கும் இந்தக் காய்ச்சல் பரவுகிறது.

குடிக்கின்ற நீரை கொதிக்கவைத்து ஆறிய பின்னர் மூடிவைத்து குடிக்காவிட்டாலும், அழுக்கான நீரினால் இந்த நோய் பரவலாம்.

*காரணி*

ஃசல்மோனெல்லா டைஃபி (Salmonella Typhi), ஃசல்மோனெல்லா பராடைஃபி (Salmonella Para Typhi) — என்கிற பற்றீரியாக் கிருமிகளே இந்த நெருப்புக்காய்ச்சலை ஏற்படுத்துகின்றன. நெருப்புக்காய்ச்சல் ஏற்கனவே உள்ள ஒருவருடைய மலத்தில் இந்த கிருமிகள் பெருமளவில் வெளியேறும். வெளியான இடங்கள், இணற்றடிக்கருகாமை, விளையாட்டு மைதானங்கள், பொதுச் சந்தைகள், வெறும் வளவுகள் என்பவற்றில் மலம் கழிப்பதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் மலத்தில் நெருப்புக்காய்ச்சலுக்குரிய கிருமிகள் இருக்குமாயின் அந்த மலத்தை

## மருந்துவம்

காகங்கள் அளைந்துவிட்டு, எஞ்சியதையும், எச்சங்களையும் எமது கிணற்றிற்குள் போட்டுவிடலாம். இதனால் நாம் குடிக்கின்ற கிணற்றுநீர் நெருப்புக்காய்ச்சல் கிருமிகளினால் மாசுபடும் நிலை வரலாம்.

வெளியான இடங்களிலுள்ள மலங்களை ஈக்கள், இலையான்கள் என்பன அளைந்துவிட்டு எமது உணவுப் பண்டங்களை அளையுமாயின் பற்றீரியாக் கிருமிகள் பெருமளவில் பரவும். கைவிரல்களிலுள்ள நகங்கள் வளர்ந்து அசுத்தமாக இருக்குமாயின்— மலம் கழித்தபின்னர் சவர்க்காரம் இட்டு கைகழுவாவிட்டால் — அவர் பலருடைய உணவுகளை கையாளுபவராயின் நெருப்புக்காய்ச்சல் பலருக்குப் பரவும்.

*இரத்தப் பரிசோதனை*

நெருப்புக்காய்ச்சலுக்குரிய விசேட மருத்துவ அறிகுறிகளை மருத்துவ சரித்திரத்தில் இருந்து அறிந்து கொள்வதோடு- இதனை விசேட இரத்தப்பரிசோதனை மூலம் (SAT) உறுதிப்படுத்திக் கொள்ளலாம். நெருப்புக் காய்ச்சல் உள்ள இரத்தம் இன்னொருவருக்கு ஏற்றப்படும்போதும் நெருப்புக் காய்ச்சல் அவருக்கு ஏற்படும்.

குளோரம் பெனிக்கோல் என்கிற குளிகையே நோயாளியின் வயதிற்கும் உடல் நிறைக்குமேற்ப கொடுக்கப்படுகின்றது. இது கடுமையான இரத்தச் சோகை நோயை ஏற்படுத்தும் என்பதால் அவதானமாக இருக்க வேண்டும்.

*மருத்துவ அறிகுறிகள்*

நெருப்புக் காய்ச்சலுக்கான அறிகுறிகள்; இடை விடாத காய்ச்சல், காய்ச்சல் படிப்படியாக அதிகரித்தல், முன் பக்கத்தலையிடி, பசியின்மை, உடல் அலுப்பாக இருத்தல், களைப்பாக இருத்தல், வயிற்றில் நோ ஏற்படுதல் — என்பன.

இதன்போது சரியான சிகிச்சை பெறாவிட்டால் இந்தக் காய்ச்சல் மோசமடையும். கடுமையான வயிற்றுவலி ஏற்படும்; வாந்தியும் வரும்; மலத்துடன் இரத்தம் வெளியேறும் அபாயம் இருக்கின்றது.

நெருப்புக்காய்ச்சல் மோசமடையும் பட்சத்தில் கடுமையான பின் விளைவுகள் ஏற்படும். நெருப்புக்காய்ச்சலுக்குரிய கிருமிகள் வயிற்றில் உணவுக்கால்வாயிலும், குடற் பகுதியிலும் பன்மடங்கு பெருக்கமடையும் பெருக்கமடைகின்ற கிருமிகள் இரத்தோட்டத்தை அடையும். இரத்தமானது உடலின் முக்கிய உறுப்புக்களான மூளை, இருதயம், சுவாசப்பைகள், ஈரல், சிறுநீரகங்கள், எலும்புகள் உட்பட உடலின் சகல பகுதிகளுக்கும் செல்லுகின்றது. எனவே, இரத்தத்தில் நெருப்புக் காய்சலுக்குரிய கிருமிகள் பரவும்போது அவை இரத்தம் செல்லும் இடமெல்லாம் சென்று அனைத்து உறுப்புக்களையும் ஒரே சமயத்தில் தாக்குகின்றன.

இதனால் மூளையில் மூளைக்காய்ச்சல்(Meningitis), இருதயத்தில் கடுமையான வலி (Pericarditis), நெஞ்சுவலி, சுவாசப்பைகளில் நியூமோனியாக் காய்ச்சல், இருமல், சளி, இரத்தவாந்தி, எலும்புகளில் புண்கள் ஏற்படுதல், (Osteomyelitis), வயிற்றில் கடுமையான புண்கள் ஏற்படுதல், குடற்புண்ணில் துவாரம் - கிழிசல் (Perforation) ஏற்படுதல் கடுமையான இரத்தப் பெருக்கு மலத்துடன் ஏற்படுதல் — இதன்போது மரணம் ஏற்படும்.

'செப்ற்றிஸீமியா' (Septicemia) என்கிற நிலையும், இரத்தத்தில் நெருப்புக்காய்ச்சலுக்குரிய கிருமிகள் பன்மடங்கு பெருகுவதனால் ஏற்படும்.

இன்று நிலவுகின்ற மருந்துகளின் தட்டுப்பாடு, நிபுணர்களின் பற்றாக்குறை, வைத்தியசாலைகளில் இடநெருக்கடி போக்குவரத்துப் பிரச்சினை என்பவற்றினால் நிலைமை மோசமடைவதால் பெரும்பாலும் மரணங்களே ஏற்படுகின்றது. குறிப்பாக குழந்தைகளிலும், சிறுபிள்ளைகளிலும் இந்தப் பிரச்சினை அடிக்கடி ஏற்படுவதுடன் மிகவிரைவாகவும் நிலைமை மோசமடையும். இதனாலேயே குழந்தைகளில் நெருப்புக் காய்ச்சல் ஏற்படும்போது பெரும்பாலும் மரணங்கள் ஏற்படுகின்றன.

*தடுப்பதற்குரிய வழிமுறைகள்*

★ குடிக்கின்ற நீரை எப்போதுமே நன்கு கொதிக்க வைக்கவேண்டும். ஆறிய பின்னர் இதனையே குடிக்கப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் கொதித்து ஆறிய நீரையே குடிக்கக் கொடுக்க வேண்டும்.

★ கைவிரல்களிலுள்ள நகங்களை அடிக்கடி வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

★ உணவு சாப்பிடுவதற்கு முன்னரும், மலம் கழித்தபின்னரும் கட்டாயமாக சவர்க்காரம் இட்டு கைகளை நன்கு கழுவவேண்டும்.

★ மரக்கறி, மீன்வகைகளை சமைக்கமுன்னர் நன்கு சுத்தம் செய்யவேண்டும்.

★ சமையல் செய்த உணவுகளை எப்போதும் மூடிவைக்க வேண்டும்.

★ உணவுப் பண்டங்களை ஈக்கள்— இலையான்கள் என்பன மொய்ப்பதை— அளைவதை— தடுக்கவேண்டும்.

★ உணவகங்கள், தேநீர் கடைகள் என்பவற்றில் உணவுப் பண்டங்களை- கண்ணாடி அலுமாரிகளில் வைப்பது மட்டும் போதாது ஈக்கள் - இலையான்கள் — கரப்பான் பூச்சிகள், எறும்புகள் என்பன மொய்க்காமலும் உணவுப் பண்டங்களை அளையாமலும் பாதுகாப்பாக சுத்தமாக மூடிவைக்க வேண்டும்.

★ உணவகங்கள், பேக்கரிகளில் பெருமளவில் உணவு தயாரிப்பவர்கள் தமது கைகளிலுள்ள நகங்களை வெட்டி கைகளை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். உணவு சமைக்க முன்னரும் உணவுப் பண்டங்களை கையாள முன்னரும் சவர்க்காரம் இட்டு கை கழுவுவதை நாள்தோறும் பழக்கமாகக் கொள்ளவேண்டும். உணவகங்கள் தேநீர்கடைகள் நடத்துகின்ற நிர்வாகத்தினரும்; இதனை உறுதிப்படுத்த வேண்டும்.

★ உணவு தயாரிப்பவருக்கு இருமல், காய்ச்சல்,முன் தலையிடி, வயிற்றுவலி, வயிற்றோட்டம் இருப்பின் பலருடைய நன்மை கருதி- அவர்கள் சமையலில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும்.

★ பொதுவைபவங்களான, கோயில் திருவிழாக்கள், ஆண்டுவிழாக்கள் கல்யாண வைபவங்களுக்கு சமையலில் ஈடுபடுபவர்களும் கைகளிலுள்ள நகங்களை வெட்டி, சமையலுக்கு முன்னரும் உணவுகளை கையாள முன்னரும் - சவர்க்காரம் இட்டு நன்கு கைகளைக் கழுவ வேண்டும்.

★ வீட்டில் யாருக்காவது குறிப்பாக குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் இடைவிடாத காய்ச்சல், தலையிடி, வயிற்றுநோ, வயிற்றோட்டம் என்பன இருந்தால் அருகில் உள்ள மருத்துவரிடம், அல்லது மருத்துவமனையில் காட்ட வேண்டும்.

★ கிராமப் புறங்களிலுள்ள வைத்தியர்கள், ஆய்வுகூட வசதி குறைந்தவர்கள் தமது நோயாளிகளுக்கு நெருப்புக் காய்ச்சல் இருக்கலாமென சந்தேகப்படும் பட்சத்தில் மேலும் நேரத்தையும் காலத்தையும் வீணாக்காது போதனாவைத்தியசாலைக்கு அல்லது வைத்திய நிபுணரிடம் நோயாளரை அனுப்பி வைக்க வேண்டும். ★

**வைத்திய கலாநிதி மாறன்**

## இசைவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப் 20

இளங்கலைஞர் மன்ற இசைவிழா ஒன்பதாம் நாளான இன்று காலை 9 மணி முதல் பகல் 12-30 மணிவரை வடமாகாண தெ. ப. பொருள் கூட்டுத்தாபன ஆதரவில் தியாகராஜ உற்ஸவம் நடைபெறும்

கூட்டுத்தாபன தலைவர் திரு. ரீ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் ஞானகுமாரி சிவனேசன், வி செல்லத்துரை ஆகியோர் பாடுவார்கள். வர்த்தக வங்கி பொது முகாமையாளர் திரு. இ. வெங்கட்ராமன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். மதிய போசனமும் இடம் பெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் திவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் ஆதரவில் 3 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் என். கணபதிப்பிள்ளையின் பாட்டு, வீ. கே. குமாரசாமியின் வயலின்இசை, என். கே. பதமநாதன், வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசை ஆகியவை இடம் பெறும். (த-111)

## சேக்கிழார் விழா

மயிலணி பெப். 20

சண்டிலிப்பாய் ஆனைகுளாய் சேக்கிழார் மன்றம் ஏற்பாடு செய்துள்ள சேக்கிழார் நாயனார் விழா இன்று பிற்பகல் 2மணி வரை முதல் இரவு 8மணி வெல்கில் சங்கானை அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறும். (த 89)

## பாடசாலைகளில்

சன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (த- 89)

# ஸ்தாபகர் டுனான்றின் மனிதாபிமான பணி செஞ்சிலுவை வடிவில் உலகம் எங்கும்!

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் வலி. வடக்குப் பிரிவினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடத்தப்படவுள்ள செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகரின் ஹென்றிடுனான்ற் ஞாபகார்த்த விழாவை முன்னிட்டு இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஹென்றி டுனான் 1828ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி பிறந்தார். ஜூன் 1859ஆம் ஆண்டு வட இத்தாலியிலுள்ள செல்பிரீனோ என்ற இடத்தில் ஆலைகளின் முகாமையாளராக தனது தொழிலைத் தொடங்கிய வேளையில் ஆஸ்திரிய படைக்கும் பிரான்ஸ் பீட்மொன்ற் படைக்கும் போர் தொடங்கி இருந்தது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காயப்படுவதை அவர் தன் கண்களால் கண்டார். அயலில் உள்ள பெண்களின் உதவியுடன் காயப்பட்டோருக்கு இன, மத, வர்க்க சிருடை வேறுபாடின்றி உதவியை நல்கினார்.

இதன் பின்பு இப்போரின் விளைவுகளை ''சல்பரினோவின் நினைவுகள்'' என்ற நூலில் அவர் எழுதி வெளியிட்டார். இதுவே மனிதாபிமான செயலுக்கு ஆரம்பவித்தாக இருந்தது. அது உலகளாவிய ஒரு தாபனமாக விளங்குவதற்காக அந்நாட்டு அரசாங்கம் ஒரு மகாநாட்டை ஏற்படுத்தியது.

*ஜெனிவா மாநாடு*

1864ஆம் ஆண்டு ஜெனிவாவில் 12 நாடுகளுடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாட்டை சுவிஸ் அரசாங்கம் கூட்டி, அதன் மூலம் போர்க்களத்தில் காயமடையும் போர் வீரர்களின் நலனைக் கவனிப்பதற்கான வழிவகையைச் செய்ய முன் வந்தது. போரின்போது ஆயுதப் படையின் மத்தியிலும் மனிதாபிமான சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து இந்த ஜெனிவா மகாநாட்டுக்குப் பின்பே உதயமாகியது.

போர்க் காலத்தில் ஆயுதப் படையினரைக் காப்பாற்றுவதுடன் அவர்களுக்கு உதவி செய்வதுடனும், இச் சட்டங்களை காலகதியில் மாற்றி அமைத்து அதன் மூலமாக போரின்போது மேலும் அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு சட்டங்களை சீர் செய்ய வேண்டுமென்பதாக மகாநாட்டினை உருவாக்கிய சர்வதேச செஞ்சிலுவைக்குழு எண்ணியிருந்தது.

எனவே தான் 1864ஆம் ஆண்டு தொடக்கம் இச்சட்டங்களில் பலவித சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. ஹேக்கின் (Haqwe) சட்டங்கள் ஜெனிவாச் சட்டங்களுடன் சேர்க்கப்பட்டன. இச் சட்டங்கள் போர் நடைபெறும்போது போர் வீரர்களின் இராணுவ நடவடிக்கைகளினால் காயங்கள் ஏற்படுத்தக்கூடிய முறைகளை கட்டுப்படுத்தும் விதத்தில் அவர்களின் கடமைகளையும், உரிமைகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

1949ஆம் ஆண்டு நடைபெற்ற நான்கு ஜெனிவா மாநாடுகளும் போர் நடைபெறும்போது மனிதாபிமானத்துக்கு மதிப்பளிக்க வேண்டியதினை மீள் உறுதி செய்தன.

*செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு*

சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு அமைய ஜெனிவா மகாநாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இயங்குகின்றது. நவீன ஆயுதங்களைப் பாவிப்பதனால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இதனாலேயே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்க முனைகிறது. உணவு கொண்டுவந்து அளிக்கிறது. அதனைக் கப்பல் மார்க்கமாகத் தருவிக்கின்றது.

கொடையாளிகளுடன் தொடர்புகொண்டு தொடர்புகளைச் சீராக்குகின்றது; உணவுகளை களஞ்சியப்படுத்தி இதனை பொதுமக்களுக்கு சென்றடையச் செய்கின்றது; அதன் மருத்துவ பிரிவு, காயப்பட்டோரை பேணிக்காப்பது, சுகாதார பிரச்சினையைக் கவனிப்பது, தொற்று நோய் பரவல், பொதுச் சுகாதாரம், போசாக்கு ஆகியவற்றை நிவர்த்தி செய்வது, ஊனமுற்றோர், பாரிசவாத நோயால் பிடிக்கப்பட்டோர் ஆகியோருக்கு சத்திர சிகிச்சை, உடற்பயிற்சி, புனரமைப்பு போன்ற வழிகளினால் உதவி செய்வது போன்ற தமது கடமைகளைச் செய்து வருகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு போரில் சிறைப் பிடிக்கப்பட்டோரை சந்திக்கிறது; மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான பராமரிப்பு,



ஹென்றி டுனான்ற்

யாபேரையும் கொன்று குவித்தல், சித்திரவதை மரணமடையச் செய்தல், நாடு கடத்தல் போன்றவற்றை தடை செய்கின்றது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் இச் சேவைகள் ஜெனிவா மகாநாட்டு உறுப்பு நாடுகள், ஐரோப்பிய சமுதாய நாடுகள், செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்கள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து வரும் பண உதவிகள், நன்கொடைகள் ஆகியவற்றினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன;

1989ஆம் ஆண்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உள்நாட்டு ஆரம்பித்த காலப்பகுதியில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்குவதற்காக இலங்கைக்கு வரவழைக்கப் பட்டது யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழு போதனா வைத்திய சாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தைபாதுகாப்பு வலையமாகப் பிரகடனம் செய்து வைத்தியாலையை சுமுகமாக நடைபெற உதவி செய்கின்றது; உணவுப் பொருள்களை கடல்மார்க்கமாகத் தருவிப்பதற்கு பாதுகாப்பும், உதவியும் அளிக்கிறது; வீடு இழந்து அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு குடிசைகளை அமைப்பதற்கு உதவி செய்வதுடன் அக் குடிசைவாழ் மக்களுக்கு உணவு, உடை, சமையல் பாத்திரங்கள் முதலியவற்றை வழங்கி அவர்களைப் பராமரிக்கின்றது; குடிசைவாழ் இடம்பெயர்ந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் நடமாடும் மருத்துவப் பிரிவுக்கு மருந்துகளையும் தந்து உதவி செய்கிறது; இத்துடன் உணவுத் தானியங்களை இருப்பில் வைத்து, இறந்தவர், காணாமல் போனோர், சிறைப்பிடிக்கப்பட்டோர், காயப்பட்டோர் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது; சிறை வைக்கப் பட்டிருப்போருக்கு அவர்கள் குடும்பத்தாருக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துகின்றது. இப் போர்க்கால சூழ்நிலையில் காணாமற் போனோர்களைக் கண்டு பிடிப்பதற்கும், செய்தித் தொடர்பு தேவைப்படுபவர்களுக்கு செய்திப் பரிவர்த்தனைப் பணிகளிலும் இக் குழு ஈடுபட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்கள் யாவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உதவியுடன் செயலாற்றப்படுகின்றன.

*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்*

இலங்கையில் 1936 ஆம் ஆண்டு பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளையாக இலங்கை மத்திய இணையாக செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. உத்தியோக பூர்வமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 1972 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இன்று உலகின் 151 சங்கங்களில் ஒன்றாகவும் 25 கோடி அங்கத்தவர்களைக் கொண்ட நிறுவனத்தின் ஓர் அங்கமாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மிளிர்கிறது.

யாழ். கிளை இலங்கையின் ஏனைய 25 கிளைகளில் ஒன்றாக 1964 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது

தீர்மானங்களை ஆக்க வல்ல செஞ்சிலுவை, செம்பிறையின் சர்வதேச மகாநாடு நான்கு வருடங்களுக்கு ஒரு முறையே கூடுகின்றது இதில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசத்துக்கு செஞ்சிலுவைச் செம்பிறை சங்கங்களின் ஒன்றியம் ஆகியவற்றுடன் தேசிய செஞ்சிலுவைச் செம்பிறை சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கு கொள்கின்றனர்.

விவேகமுள்ள தத்துவஞானியும், கொடையாளியும், நோபல் பரிசு பெற்றவருமாகிய செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகருமான ஜீன் ஹென்றி டுனாட் அவர்கள் சொல்பெரினோவில் தான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு உலகத்தின் எதிர்காலத்தினைத் திட்டமிட்டுள்ளார். மனிதாபிமானத்துக்கு அவர் இட்ட வித்து, காலகதியில் பெரு வளர்ச்சியுற்று பெருவிருட்சமாக வளர்ந்து, பல்வேறு கிளைகளை உள்ளடக்கி, பல்வேறு வலையில் வியாபித்திருப்பினும், அவை யாவும் ஒரே குறிக்கோளுடன், குறிப்பாக உலகத்தின் அனைத்து சமூகங்களின் நலனை கவனிப்பதும் கலவரகாலத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி புரிவதும், வறுமையில் வாடும் மாந்தர்களின் கஷ்டங்களை களைவதும் என்ற குறிக்கோளுடன் உலகெங்கும் இயங்கி வருகிறது. ★

**கௌரவ செயலாளர்,**
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கயாழ் கிளை*

O/L DAY CLASS
ஆரம்பம்: 28-02-94
யூனிவேர்சல் UNIVERSAL
கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்
நேச்சர் NATURE
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
(சி-7250)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
தற்காலிக தொழிலாளர் வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுத்திகரிப்புப் பணியுடன் கழிவுப் பொருள்களையும் நிர்மாணப் பொருள்களையும் ஏற்றியிறக்கும் தொழிலாளர்களை நியமனம் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச்சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 27 - 02 - 94 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவிலமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகைமைகள்:
(அ) கல்வி: ஐந்தாம் வகுப்பில் சித்தி
(ஆ) வயது: 18 தொடக்கம் 40 வயது வரை
(இ) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 19- 02- 1994.
இ. இ.
(சி. 7256)

கண்ணீர் அஞ்சலி
வைத்திய கலாநிதி விநாயகமூர்த்தி
அவர்கள்
அன்னாரின் பிரிவையொட்டி அவரின் துணைவியார், அவரின் மகன். விக்னாராஜா அவரின் பாரியார் மற்றும் உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியும் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும்.
மு. பத்மநாதன் குடும்பத்தினர்,
''வெஸ்கோ''.
[சி-7408]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு அலுமாரியும் (கபேட்), இரண்டு கபேட் 3' உயரம் 3' அகலம்கொண்டதும், 6' நீளம் உள்ள (Office Table) 1 பெட்டியும், (Coffer Shelf) உடன் விற்பனைக்குண்டு சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சண்டிக்குளி, யாழ்ப்பாணம். (29498)

றொபின் (Robin) By 20 நீளைநக்கும் இயந்திரம் Scooter Tyres பொருட்ட வண்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 10-00 க்கு முன்பும் 2-30க்கு பின்பும். இல. 387, கோவில் வீதி, நல்லூர். (29583)

### கோழிக்குஞ்சு விற்பனை

மறுவலன் 6 நாட்கள் வளர்ச்சியடைந்த சேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்வம் வீதியுடாக சாம், வெல்லி நிதம் வீதி, உடுவில். (7005)

Lohmann Brown சேவற் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Prima. Lohmann, Broiler குஞ்சுகள் ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யவும்: நல்லூர் விடிபோ சென்ரர், முத்திரைச் சந்தையடி, நல்லூர். [29519]

### கோழிக்குஞ்சுகள்

Hy-Line Brown, Hy Line white, கைகள் பிறவுன், கைகள் வெள்ளை, பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 999 வெளிநாட்டு மீன் தூள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் 21-2-94 தொடக்கம் கொமட் பேட்டுக் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29525)

### காசாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் புகைப்பட நிலையத்தில் பணியாற்றுவதற்கு பெண் பணியாளர் தேவை. கல்வித் தகைமை மற்றும் சுயவிவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்குக. 611, மே/பா உதயன், நாவலர் வீதி. (29471)

### மணிக்கூடு திருத்தவேலை

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன், திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி சாவகச்சேரி. (சி/7215)

### வெளிவந்துவிட்டது

இந்திய தமிழ் நூல்கள் வரலாற்று மற்றும் ரமணிச்சந்திரன், லக்ஷ்மி, பட்டுக்கோட்டை பிரபாகரன் ஆகியோரின் நாவல்கள் சிறுகதைகள் மற்றும் ஆங்கில வைத்திய புத்தகங்கள், பொக்கற் கலண்டர்கள் விற்பனையாகின்றன கிடைக்குமிடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே கே எஸ் றோட், யாழ்ப்பாணம். (சி-7252)

### மணமகன் தேவை

யாழ். இந்து 25 வயது நல்ல உயர் குடும்பத்தைச் சேர்ந்த சித்திரை 3ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லாத, 5'-3'' உயரமுள்ள, வேம்படியில் படித்து A/L சித்தியடைந்த, Diploma [Computer Studies] செய்த அழகான பெண்ணுக்கு இலங்கையில் / வெளிநாட்டில் வேலைபார்க்கும் உயர்கல்வியுடைய மணமகன் தேவை. ஜாதகக்குறிப்பு, முழு விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். 613, மே/பா உதயன். (29500)

### மணப்பெண் தேவை

சுவிஸ்சர்லாந்தில் நிரந்தரம் ஒன்றில் வதிபுரியும் 30 வயதுடைய நல்லொழுக்கமுள்ள இந்து வாலிபருக்குக் குறைந்தது க. பொ. த (சா/தரம்) படித்த, அழகிய மணப்பெண் தேவை சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. பிறந்த நேரம், ஜாதகக் குறிப்பு, பெண்ணின் விவரங்களையும் அனுப்பி வைக்கவும். இல 615, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29585)

### எண் ஜோதிடம்

ஒவ்வொருவருக்கும் வழங்கப்பெறும் பெயரே நன்மை தீமைகளை நிர்ணயிக்கக் கொண்டிருக்கும். அபூர்வ சக்தி வாய்ந்தவை. குழந்தைகளுக்கு சூட்டும் பெயரே எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கின்றது. வளர்ந்தோரின், தொழில் தாபனங்களின் பெயர்களும் அதிர்ஷ்டகரமானதா? என்பதை அறிய சிரமைந்துக்கொள்ளவும் மற்றும் பலன்கள் விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வெளி வீடு ஸ்ரீவாணி. (6980)

### சனிமாற்றம்

1-3-94 முதல் 2-7-94 வரை வியாழ வக்கிரமும் குரு 10/- (ஜானாகிரியர் சத்யாவின் புதிய வெளியீடு) எங்கும் விற்பனையாகிறது. பாடசாலை உபகரணங்களுக்கு செல்வ புத்தகசாலை (ஆஸ்பத்திரி முன்னால்), மானிப்பாய். (29538)

### தவறிவிட்டது

திருமதி அனுஷியா புவனராஜா என்பவரது 3½ பவுண் மதிக்கத்தக்க சங்கிலியொன்று 18-2-94 அன்று யாழ்ப்பாணத்திற்கும் மருதனார்மடத்திற்குமிடையே சுமார் 4-30 — 6-00 மணிக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். உதயசூரியன் வீதி, உடுவில். (29533)

### கிற்றார்

நல்ல நிலையிலுள்ள கிற்றார் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சபாநிக் (சண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில்) சண்டிக்குளி. (29534)

### மகாதேவா ஜோதிடம்

அதிர்ஷ்ட எண் மாற்றம், குறிப்பு, நிலையம், கை பார்த்தல் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி காலை முதல் மாலை வரை. 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (29501)

## கண்காட்சி

சித்தமருத்துவ மாணவர் வாரத்தை முன்னிட்டு

21-02-1994 திங்கள் ]
22-02-1994 செவ்வாய் ] முற்பகல் 9-30 பிற்பகல் 4-30 வரை கண்காட்சி நடைபெறும்
23-02-1994 புதன் ]

இடம்: **யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை** கைதடி

பிரதம விருந்தினர்: யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா

சிறப்பு விருந்தினர்: அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர்

ஆரோக்கிய, நோயுற்ற நிலையில் மூலிகைகளின் பங்கு போர்க்கால சூழ்நிலையில் தொற்று நோய்கள் பற்றியும் பாடசாலை மாணவர்களுக்கும் உகந்த வகையில் அமைக்கப்பட்ட கண்காட்சி

அன்பளிப்பு 5/-

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

சித்த மருத்துவ மாணவர் வாரம் சிறப்புற எமது வாழ்த்துக்கள்

**பேபி போட்டோ**

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[29539]

## தேவை

றீ-ரச்சிங் (RE-TOUCHING) பினிசிங் (FINISHING) வேலை தெரிந்தவர்கள் புதன் கிழமை (23-02-94) காலை 10-00 மணிக்கு நேரில் வரவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

**சித்ராலயா**

18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(சி/7248)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15 10 1963



மறைவு: 20 02 1983

**செல்வி பிரபாலினி பாலசுப்பிரமணியம்**

(காங்கேசன்துறை)

(வேம்படி மகளிர் உயர்தர விஞ்ஞான வகுப்பு மாணவி)

பாசமிகு பிரபா......
பொறுமையினை நிலைநாட்டி புகழ்பெற்றீர்கள்
சிரித்துப் பேசி சிந்தை கவர்ந்தீர்கள்
கள்ளமில்லாப் புன்சிரிப்பும் கபடமில்லா-நேர்விழியும்
வஞ்சமில்லா நிறைநெஞ்சும் வகை ஏரா-நட்புடனும்
வாழ்ந்த ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
அழியா உம் நினைவு எம் நெஞ்சை விட்டு.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்

மேரோஸ் லேன்,
மானிப்பாய். [29536]

# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

## ஒன்பதாம் நாள் - இன்று
## தியாகராஜ உற்சவம்

வடமாகாண தெ. ப. வ. அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் ஆதரவில்

காலை

**9-00 — 10-30** மங்கள இசை

★ நாதஸ்வரம்
கே. ஆர். சுந்தரமூர்த்தி
எஸ். எஸ். சிதம்பரநாதன்
வி. கே. நம்பிராசன்
ஆர். கேதீஸ்வரன்
ஆர். எஸ் ரஜீந்திரன்

★ தவில்
என். கே. வீரசாமி
ரி. உதயசங்கர்
கே. சிவகுமார்
என். ஜெயராமன்
எஸ். ராமதாஸ்
பி. எஸ். ரவீந்திரன்

**10-30 — 11-00** மங்கள விளக்கேற்றல்

திரு. சி. கந்தசாமி [தலைவர், வலிகாமம் கொத்தணி]
திரு. சி. வேலாயுதபிள்ளை [தலைவர், யாழ். கொத்தணி]
திரு. தே. அந்தோனிப்பிள்ளை [தலைவர், வடமராட்சி கொத்தணி]
திரு. அ. சிவசுப்பிரமணியம் [தலைவர், தென்மராட்சிக் கொத்தணி]

தலைவர்:
திரு இ சிவனேசன் [பொது முகாமையாளர், ப தெ. வ. அ. கூ.ச. சமாசம்]

பிரதம விருந்தினர்:
திரு. இ. வெங்கட்ராமன் [பொது முகாமையாளர் வர்த்தக வங்கி]

சிறப்பு விருந்தினர்:
திரு. சா. செல்வரத்தினம் [தலைவர், ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்]

**11-00 — 11-45** பாட்டு
ஞானகுமாரி சிவனேசன் — பாட்டு
பாக்யலட்சுமி நடராஜா — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**11-45 — 12-30** பாட்டு
வி. செல்லத்துரை — பாட்டு
என். வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்

**12-30 — 2-00** மதிய போசனம்
உபயம்:
திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்

தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் ஆதரவில்

மாலை

**3-00 — 4-00** மங்கள இசை
ஏ. முருகானந்தம், என். ஆர். சந்தான கிருஷ்ணன் ] — நாதஸ்வரம்
என். ஆர். எஸ். ரவீந்திரன், என். ஆர். எஸ். சுதாகரன் ] — தவில்

**4-00 — 4-20** வீணை இசை
பாமினி தர்மலிங்கம், ஜெயபாரதி யோகநாதன் ] — வீணை
எஸ். துரைராசா — மிருதங்கம்

**4-20 — 5-05** பாட்டு
வி. கே. நடராசா — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எஸ் துரைராசா — மிருதங்கம்

**5-05 — 5-30** வீணை இசை
உதயந்தி வாமதேவன், சுதர்ஷனி காசிவிஸ்வநாதன் ] — வீணை
எஸ். துரைராசா — மிருதங்கம்

**5-30 — 6-15** பாட்டு
கே. ராமநாதன் — பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா — வயலின்
எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
எஸ். பாலச்சந்திர சர்மா — கஞ்சிரா

**6-15 — 7-00** வயலினிசை
வி. கே. குமாரசாமி — வயலின்
எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் — கடம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
திரு. பொ. மாசிலாமணி [தலைவர் ப. நோ. கூ. ச. வேலணை]
திரு தி. சுந்தரலிங்கம் [தலைவர் ப. நோ. கூ. ச. ஊர்காவற்றுறை]
திரு. எஸ். விக்னேஸ்வரன் [தலைவர், ப. நோ. கூ. ச. காரைநகர்]
திரு எஸ். உலகேஸ்வரன் [வர்த்தகர்]

தலைவர்:
திரு. ப. கனகலிங்கம் [தலைவர், ப. நோ. கூ. ச. தீவகம்]

பிரதம விருந்தினர்:
திரு எஸ். சிவபாலன் மகப்பேற்று நிபுணர் [யாழ். போதனா வைத்தியசாலை]

சிறப்பு விருந்தினர்:
வைத்தியக் கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன் [யாழ். பல்கலைக்கழகம்]

**7-30 — 8-15** பாட்டு
எஸ். கணபதிப்பிள்ளை — பாட்டு
பாக்யலட்சுமி நடராஜா — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
[illegible] — கடம்

**8-15 — 9-30** மங்கள இசை
என். கே. பத்மநாதன், வி. கே. பஞ்சமூர்த்தி ] — நாதஸ்வரம்
கே. நித்தியானந்தன், ரி. உதயசங்கர், ஆர். எஸ். சுதாகரன், க. சிவகுமார் ] — தவில்

கலா ரசிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:

**R. V. G. பீடி ஸ்தாபனம்**

நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-7381]

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய நிதி உதவிக்காக யாழ்ப்பாணம் - நீராவியடி கலைக்கல்லூரி வழங்கும்,

## புலவர் முத்து இராசரத்தினத்தின்
# இலங்கை வேந்தன்
## இசை நடன நாடகம்

இடம்: கைலாசபதி கலையரங்கு.
காலம்: 20-02-1994 ஞாயிற்றுக்கிழமை. பிற்பகல் 3.30 மணி.
அன்பளிப்பு: ரூபா **100/-, 50/-, 20/-**

காலை 9 30 மணி காட்சி நடைபெறமாட்டாது. மாலை காட்சிக்கு சகல அனுமதிச்சீட்டுகளும் செல்லுபடியாகும்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்
யாழ் பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

**வெஸ்கோ தேநீர்ச்சாலை,**
திருநெல்வேலி.

(29510)

## ஆடை தயாரிப்போர் தேவை

பெண்களுக்குரிய ஆடைகள் வெட்டுவதில், தைப்பதில், பூப்போடுவதில் அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்தும்;

ஆண்பிள்ளைகளுக்குரிய சேட், காற்சட்டைகள் தைப்பதிலும் பிறா வெட்டுவதிலும் தைப்பதிலும் திறமையும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: **25-2-1994**

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

**சிந்திரி காமென்ஸ்,**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

(29482)

## வலி.மேற்கு பிரதேச வர்த்தக சங்க ஆதரவில்

# பட்டி மன்றமும் கலை நிகழ்வும்

காலம்: **20-02-1994** ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5 மணி

இடம்: வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை (ஆரம்பப் பிரிவு)

நிகழ்ச்சி நிரல்:
மௌன அஞ்சலி
தலைமையுரை
(வலிமேற்கு பிரதேச வர்த்தக சங்கத் தலைவர்)
சிறப்புரைகள்
(விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள்)

## பட்டிமன்றம்

**'வெளிநாட்டு போராட்ட வரலாறுகள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு'**

| பயன்தராது | பயன்தரும் |
|---|---|
| திரு. இ. வரதராஜன் | திரு இ. செல்வவடிவேல் |
| திரு. எஸ். கணேஸ் | திரு க. நாகேஸ்வரன் |
| திரு. எஸ். வேலாயுதம் | திரு சி. மகேந்திரன் |

நடுவர்: அ. குமாரவேலு

கலை நிகழ்ச்சி:

**✻ களத்தில் காத்தான் ✻**
(நாடகம்)

இந் நிகழ்வில் அனைத்துத் தமிழீழ மக்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

— விழா அமைப்புக் குழு.

வட்டுக்கோட்டை. [29538]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org